**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 768/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.** 4 |
| Name | : | **தீபன்ராஜ்** |
| Father’s / Husband Name | : | **ராஜேந்திரன்** |
| Address | : | **சத்திரமனை** |
| Age | : | 21/2026 |

**தேதி : 25.06.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ஆ. சத்தியபாமா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. **எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சத்திரமனையில் வசித்து தனியார் கல்லூரி ஒன்றில் 4ம் ஆண்டு படித்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவ விபத்தில் இறந்துபோன அரவிந்த் என்னுடைய நண்பர் ஆவார். அவருடன் நானும், கவிமணி என்பவரும் கடந்த ஆண்டுஇருசக்கர வாகனத்தில் வந்தபோது டி.களத்தூர் பிரிவு ரோடு அருகே கார் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டது. அந்த விபத்தில் அரவிந்த் என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டு பின்னர் இறந்துபோய்விட்டார். எனக்கு இரண்டு காலிலும் காயம் ஏற்பட்டது. கவிமணி என்பவருக்கு வலதுகால் இடுப்பு பகுதியில் காயம் ஏற்பட்டது. விபத்து நடந்த நாள், நேரம் எனக்கு நினைவில்லை. இந்த வழக்கு சம்பவம் குறித்து நீதிமன்றத்திற்கு வெளியே எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டு எதிரிக்கு எதிராக மேல் நடவடிக்கையை நான் வலியுறுத்தவில்லை. விபத்து ஏற்படுத்திய காரின் பதிவு எண்ணோ, அதை ஒட்டிய நபர் யார் என்று எனக்கு தெரியாது. போலீஸார் என்னை விசாரணை செய்யவில்லை.

**<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be correct

THAARINI V C

Digitally signed by THAARINI V C
Location: Judicial Magistrate No.1, Perambalur
Date: 2026.06.25 18:47:36 +0530

Judicial Magistrate No.1
Perambalur.